

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு கூட்டம் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம் தலைமை தாங்கினார் உடன் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ் .உமரிசங்கர்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், திருச்செந்தூர் நகரமன்ற துணைத் தலைவர் செங்குழி ரமேஷ், திருச்செந்தூர் நகர செயலாளர் வால் சுடலை,ஓட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் ரமேஷ்,ஒன்றிய செயலாளர்கள் நவீன் குமார், பரமன்குறிச்சி இளங்கோ, உடன்குடி பாலாசிங்,ஆழ்வை ஜனகர்,செந்தூர் மணி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், அஞ்சுகுளிப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 24.12.2024 அன்று திறந்து வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி சு. பழனியம்மாள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கா.விஜயன், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி ஆர்.தேவி ராஜாசீனிவாசன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள்!

## பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

திண்டுக்கல்,டிச.26-

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் முடிந்த திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்.

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கப்பட்டி, சிலுவத்துார், கம்பிளியம்பட்டி, செங்குறிச்சி, வேம்பார்பட்டி, அஞ்சுகுளிப்பட்டி, சாணார்பட்டி, பஞ்சபட்டி மற்றும் கூவனுாத்து ஆகிய ஊராட்சிகளில் திட்டப் பணிகளை திறந்து வைத்து அமைச்சர் பேசும்போது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்.

மகளிர் சுயஉதவிக்குழுவினரின் 5 பவுனுக்கு கீழ் நகை கடன் தள்ளுபடி, கூட்டுறவு வங்கியில் பெண்கள் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கூட்டுறவு கடன் தொகை ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சம் வரை உயர்த்தி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண்கள் முன்னேற்றத்தி ற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள நபர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப் பட்டு, வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் சுமார் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

**8 லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும்!**

தமிழ்நாட்டில் இன்னும் 10 ஆண்டுகளில் குடிசைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கும் வகையில் ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீடும் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன. மேலும், ஒரு பயனாளி வீடு கட்டுவது என்பது அவரது எதிர்காலத்திற்காக வாழ்நாளில் ஒருமுறை மேற்கொள்ளும் பணியாகும். இப்பயனாளிக்கு தகுதியிருப்பின் மகளிர் சுய உதவிக்குழு மூலம் ரூ.50,000 அல்லது கூட்டுறவு வங்கிகளில் குறைவான வட்டியில் ரூ.1.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படும். மேலும், வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் சொந்த வீடு கனவு, "கலைஞரின் கனவு இல்லம்" திட்டம் மூலம் சாத்தியமாகியுள்ளது. "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 7,000 வீடுகள் கட்டப்படவுள்ளன. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

விவசாயம் மற்றும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகிறது.

**பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்வு!**

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ் வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் முதியோர் உதவித்தொகை ரூ.1000 என்பது ரூ.1,200ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1000 என்பது ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது, மேலும், அதிகளவு பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை ரூ.1000 லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டத்தில் ஆண்டுக்கு 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகளை மேம்படுத்தும் வகையில் ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 20,000 கி.மீட்டர் நீளம் சாலைகள் ரூ.8,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றிய சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

அனைத்து ஊராட்சிகளும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிக்குட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டும், என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி தெரிவித்தார்.

விழாவில், முன்னாள் நத்தம் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சு.பழனியம்மாள், ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் சு.ராமதாஸ், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் கா.விஜயன், லலிதா மோகன், ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜ், மோகன், ரத்தினகுமார், பழனிச்சாமி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,கச்சேரிதளவாய்புரம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் G.V.மார்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், ஓட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் ரமேஷ், ஒட்டப்பிடாரம் வட்டார வளர்ச்சி அலுவலர் சசிகுமார், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், கச்சேரிதளவாய்புரம் ஊராட்சி மன்ற தலைவர் சேர்மபொன்செல்வி ரவிக்குமார், எப்போதும்வென்றான் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அண்ணல் அம்பேத்கர் குறித்து அவதூறு : அமித்ஷாவைக் கண்டித்து

# சிவகங்கை மாவட்டத்தில் 15 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

## மு.தென்னவன் – திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. தலைமை!

சிவகங்கை. டிச. 26 -

நாடாளுமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்ணல் அம்பேத்கர் குறித்து அவதூறாக பேசியதை கண்டித்து கழக தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் 15க்கும் மேற்பட்ட இடங்களில் ஒன்றிய நகர பேரூர் கழகங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டு உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினார்கள்.

சிவகங்கை இளையான்குடி சாலையில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பாக நகர் கழகச் செயலாளர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய நகர நிர்வாகிகள் வீனஸ் ராமநாதன்,வீரகாலை, ஆறு .சரவணன், ஜெயகாந்தன், அயூப் கான், ஜெயக்குமார், முருகேசன், அழகு சுந்தரம், ,பொன்னம்பலம், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திருமதி திலகவதி கண்ணன், நகர் அமைப்பாளர் மஞ்சுளா ,சேகர், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

திருப்பத்தூர் காந்தி சிலை முன்பாக ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேல் விராமதி மாணிக்கம் தலைமையில் பேரூர் கழக ஆர். கார்த்திகேயன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பேரூராட்சி மன்ற தலைவர் கோகிலராணி நாராயணன் துணைத் தலைவர் காண்முகமது, நெற்குப்பை பேரூராட்சி மன்ற தலைவர் கே. பி .எஸ் .பழனியப்பன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணிஅமைப்பாளர் கே. எஸ். நாராயணன், நிர்வாகிகள் திருநாவுக்கரசு, ராம .ரவி, மாவட்ட மாணவரணிஅமைப் பாளர் கதி .ராஜ்குமார் மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் மாங்குடி, தொ.மு.ச .முத்தலிபு, சண்முக நாதன்,நிர்வாகிகள் இளைஞரணி மனோகரன், வைகை மாறன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் சோமசுந்தரம், தமிழ் நம்பி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ருக்மா சரவணன் ,சுப்பையா புதூர் கண்ணன், பொருளாளர் ஏ.எம் .கண்ணன், பார்த்தசாரதி, மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என். ரவி உதய சண்முகம், வைரமணி, பிச்சை முகமது, பஷீர் அகமது ,கருணாமூர்த்தி ,மகளிர் அணி பாண்டியம்மாள் , அபுதாகிர், முத்துக்குமார், ஹரிகரன், ராமநாதன், உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்

காரைக்குடியில் அண்ணல் அம்பேத்கர் சிலை முன்பாக முன்னாள் அமைச்சர் முன்.தென்னவன் தலைமையில் மாநகரகழக செயலாளர் என். குணசேகரன் மேயர் எஸ். முத்து துரை முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில்குமார், நிர்வாகிகள் சொ.கண்ணன், சிதம்பரம், துரை. நாகராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் , மாவட்ட பிரதிநிதி சேவியர் ,ரமேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

காளையார் கோவில் பேருந்து நிலையம் முன்பாக கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் யோக . கிருஷ்ணகுமார் ஆர். எம். கென்னடி , ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் தோக்கப்பன், வரதராஜன், வெங்கடேசன், ரமேஷ் ,குண்டு மணி , செல்வராஜ், சார்லஸ் முத்துக்குமார், சதீஷ் ,சங்கு மணி ,முத்தூர் கார்த்தி ,உட்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

தேவகோட்டை நகராட்சி அலுவலகம் முன்பாக நகர் கழக செயலாளர் பெரி. பாலா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நகர் கழக நிர்வாகிகள் இளங்கோ, பொருளாளர் அன்பு செல்வன், இலக்கிய அணி அழகையா, சரவணன் ஜாகிர் உசேன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

தேவகோட்டை வடக்கு ஒன்றிய கழக செயலாளர்பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

தேவகோட்டை மேற்கு ஒன்றிய த்தில் ஒன்றிய செயலாளர் நாகனிரவி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இளைஞரணி ராஜா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கண்ணங்குடியில் ஒன்றிய செயலாளர் லெ.மு. ரவிச்சந்திரன் தலைமைகள் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இளையான்குடி கண்மாய்கரையில் முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதியரசர் தலைமையில் பேரூர் கழக செயலாளர் செயலாளர் பி.ஏ. நஜ்மூதுன் ஒன்றிய கழக செயலாளர் கள் ஆறு. செல்வராஜன், கா .வெங்கட்ராமன் ,வே .தமிழ்மாறன் ஆகியோர் முன்னிலையில் கண்டண ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் த.உதயகுமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எம்முருகானந்தம், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் தலைமைக்கழக பேச்சாளர் அய்யாசாமி உட்பட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரையில் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ .தலைமையில் நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி ஒன்றிய கழக செயலாளர்கள் துரை.ராஜாமணி, எம். அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா.அண்ணாத்துரை, துணைத் தலைவர் முத்துச்சாமி, மானாமதுரை நகர்மன்ற துணை தலைவர் பாலா சுந்தர் ,நிர்வாகிகள் ரவிச்சந்திரன் ,சண்முகப்பிரியா, கார்த்தி, மயில்வாகனன் பொதுக்குழு உறுப்பினர் ஜெயமூர்த்தி, உட்பட நிர்வாகி கள் கலந்து கொண்டார்கள்.

கல்லல் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கம்பனூர் அம்பேத்கர் சிலைமுன்பாக ஒன்றிய கழக செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சாக்கோட்டை மேற்குஒன்றிய கழகத்தின் சார்பில் புதுவயலில் ஒன்றிய கழகச் செயலாளர் சுப. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேரூர் கழக செயலாளர் பக்ரூதீன் அலிபாய் உட்பட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிங்கம்புணரி பேருந்து நிலையம் முன்பாக ஒன்றிய கழகச் செயலாளர்கள் பூமணி, கே .பாலசுப்பிரமணியன் தலைமையில் பேரூர்கழக செயலாளர் கதிர்வேல் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் அம்பலமுத்து பேருராட்சி மன்றத் துணைத் தலைவர் இந்தியன் செந்தில், நிர்வாகிகள் சிவபுரிசேகர், அலாவுதீன் ,முன்னாள் ஒன்றிய கழக செயலாளர்ஏ.எல். சந்திரன், சிவக்குமார் மனோகரன் உட்பட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எஸ். புதூர் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்புவனம். பேருந்து நிலையம் முன்பாக மாவட்ட கழகத் துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் கள் திருமதி வசதி சேங்கைமாறன் ,எம். ஏ கடம்பசாமி, பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஒன்றிய துணைத் தலைவர் மூர்த்தி, பேருராட்சி மன்ற துணை தலைவர் ரகுமத்துல்லாகான், நிர்வாகிகள் ஈஸ்வரன் ,அண்ணா மலை, சேகர், மகேந்திரன், குபேந்திரன், உட்பட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் அனைவரும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். அனைவரும் அம்பேத்கர் படத்தினை கையில் வைத்திருந்தனர்.



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டிலான சமுதாய கூடங்கள் கட்டும் பணிக்கான திட்டப் பணியை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் அரசு அதிகாரிகள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.



தந்தை பெரியாரின் 51 வது நினைவு தினத்தை ஒட்டி தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி கட்சி அலுவலகத்தில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், .தெற்கு மாவட்ட மாவட்ட,மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.